புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# கவிமதி சோலச்சி கவிதைகளில் சமூகச்சிக்கல்கள்

**ஆய்வாளர்**

**இரா.கலாவதி**

*பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்,*
*தமிழாய்வுத் துறை, மா.மன்னர் கல்லூரி*
*புதுக்கோட்டை.*

**நெறியாளர்**

*முனைவர் சு.மாதவன்,*
*ஆய்வு நெறியளார்*
*தமிழாய்வுத் துறை, மா.மன்னர் கல்லூரி*
*புதுக்கோட்டை.*

*இக்கால இலக்கியங்களில் அனைத்துமே சமூகத்தைச் சீரமைக்கும் நோக்கத்தோடே படைக்கப்படுகின்றன. இந்தவகையில் கவிமதி சோலச்சியின் கவிதைகளும் சமூகச் சிக்கல்களைக் கோபாவேசத்தோடு எடுத்துரைப்பதோடு, தீர்வுகளையும் முன்வைப்பனவாக அமைந்துள்ளன என்பதை இக் கட்டுரை ஆராய்கிறது.*

**‘விரிசல்’ கவிதையின் உள்ளடக்கங்கள்**

*ஆசிரியரின் இரண்டாம் கவிதைத் தொகுப்பு நூல் **‘விரிசல்’** அனைத்துக் கவிதைகளும் சமூகம் சார்ந்தவையே. அழகிய சிநேகிதம் என்பது பேனாவைப் பற்றிய கவிதை. நண்பனைப் பற்றி பாடுவதைப்போல் ஆரம்பித்து கடைசியில் பேனாவைச் சொல்கிறார். இதில் நான்கு உத்தி நிலைமை கையாண்டு உள்ளார். இந்த உத்தி வாசகர்களைக் கவரும்வகையில் உள்ளது. இதில் எழுதுகோலை அவர் எவ்வாறு எவ்வளவு நேசிக்கிறார் என்பது புரியும்: உன்னைத் தொட்டுவிடத் தவமிருந்தேன் அதனால் தவழுகின்ற வயதிலேயே தழுவிக் கொண்டேன். ‘காற்புள்ளி’ என்ற தலைப்பு மூடநம்பிக்கைக்கு முற்றுப்புள்ளி இடு. முறையான நம்பிக்கைக்குக் காற்புள்ளியிடு இரு புள்ளிகளை வைத்து சமூக மாற்றத்திற்கு வித்திட்டுள்ளார்.*

*‘மறக்காமல்’ என்ற கவிதையில் ஒருவன் பிறக்கும்போது கொண்டு வருவதுமில்லை கொண்டு போகபோவதில்லை என்ற வரிகள் அறத்தை வலியுறுத்துகின்றன.*

*கவிஞர் இத்தோடு நில்லாமல் அடுத்த கட்டத்திற்கு நகர்ந்து இந்த மண்ணில் பிறந்ததற்கு ஏதோ ஒன்றைச் செய்துவிட்டுப் போ. அதுவும் நல்லதையே செய். அதைத்தான் கவிஞன் கொடுத்துவிட்டுப்போவோமா மரங்களையாவது மனித சமூகத்திற்கு என்றார்.*

*‘எழுச்சி கொண்டு எழு’ என்ற தலைப்பில் தன்னம்பிக்கை பற்றி ஒரு அழகான கவிதை. மலர்ச்சி இன்றி மடிந்துகிடந்தால் கூவம் உன்னை கூட்டாளியாக்கும். சாக்கடைப் புழுவுக்கு*

*எழுச்சி கொண்டு எழு மனிதா இமயம் உன்னை ஏந்திக் கொள்ளும்* ***புகழின் உச்சிக்கு*** *ஒரு மனிதனை இதைவிட என்ன சொல்லி எழுப்ப முடியும் என்று தோன்றும் வண்ணம் எழுதியுள்ளார். ஒரு கலைக்கூத்தாடும் பெண்ணை இந்தச் சமூகம் எப்படி பார்க்கின்றது என்பதையும் அதற்கு அவள் வேதனைப்பட்டதையும் இவரின் நாடக மேடை என்ற கவிதை விளக்குகின்றது. இக்கவிதையில் பெண்ணியம் பேசப்படுகின்றது.*

*''அவள் விழிகளைத் திறந்துபடியே மூடி அழுது கொண்டாள்'' என்பது அவ்வரிகள்.*

*பேரறிஞர் அண்ணாவுக்கும் அவருடைய நண்பர் டி.கே. சீனிவாசனுக்கும் இடையே சிறு பூசல். இருவரும் சில நாட்கள் பிரிந்தே இருந்தனர். அண்ணா பார்க்காமல் வேதனைப்பட்டார். பார்ப்பதற்கு என்ன வழி என்று பார்த்தார். அப்போது காஞ்சியில் ஒரு பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யச் சொல்லி அதற்கு டி.கே.எஸ் அவர்களைப் பேச அழைக்கச் சொன்னார். டி.கே.எஸ்.ம் வந்து பேசினார் பேச ஆரம்பித்தவுடன் மேடை முன்வரிசையில் அண்ணா வந்து அமர்ந்துவிட்டார். டி.கே.எஸ். திகைத்துப்போனார். (நண்பனைக் காண அண்ணா கண்ட வழி இது, இதைத்தான் நண்பனுக்கு ஒரு கடிதம் என்ற கவிதை விளக்கி உள்ளது.) நீ நினைப்பதில்லை நினைக்க மறந்ததில்லை நான் மறக்க நினைத்ததில்லை என்கிறார் ஆசிரியர். ஒட்டுக்குப் பணம் வாங்குவதை அந்த எச்சத்தனத்தைக் கவிஞர், ஓட்டுக்கு காசு அது நமக்கு வைத்துக்கொள்ளும் வேட்டு எனச் சாடுகின்றார்.*

*காவேரிக்கு ஏற்பட்டு இருக்கின்ற சோதனையை வேதனையோடு*

*''பாவம் என்ன செய்வாள்*
*பிறந்த இடமும் சரியில்லை*
*புகுந்த இடமோ சரியாய் இல்லை''*

*என சாடுகின்றார். இந்தக் கவிதை கவிஞர் மு.மேத்தாவின் 'ஒரு கடிதம் அனாதையாகிவிட்டது' என்ற கவிதையின் சாயலுடன் உள்ளது. ஓசோன் படலத்தில் ஓட்டை போடுவதை கருத்தடை மாத்திரை என்ற தலைப்பில் உள்ள கவிதை சாடுகின்றது.*

*கார்பன் புகைகளும் பல்லைக் காட்டும் பாலீதின் பைகளும் வான மேலாடையை கிழித்து சூடு வைக்கின்றன. சுற்றுச்சூழலில கவிஞருக்கு உள்ள அக்கறையை வெளிப்படுத்தும். இன்னும் சில கவிதைகளும் உண்டு. 'வான மேலாடை' என்பதை ஆண்டாள் தன்னுடைய நாச்சியார் திருமொழியில் 'விண்ணில் மேலாப்பு' விரித்தாற் போல் மேகங்கள் எனக் கூறுகின்றார். 'வானத்தைப் பார்க்கிறேன்' என்ற கவிதையில் தடை கொண்ட பூமியை விடத் தடைகளற்ற வானம் நிறையவே பிடித்திருக்கிறது.*

*விவசாயம் எப்படி மழையின்மையாலும் ஆள்வோராலும் சீரழிகிறது என்பதை அவருடைய எண்ணக் குமுறல்களை பாழடைந்து பங்களாவைப்போல் குடல்வெடித்துக் கிடக்கிறது. வயல்காடு சில கவிதைகளை ஒப்பிட்டும் சொல்லி இருக்கின்றார். மேலும் அரசியல்வாதிகள் ஆட்சியாளர்கள்மீது கோபம்கொப்பளித்து இப்படிச் சொல்கின்றார். சாதிய வன்மங்கள் தொடருது, மதவெறி மண்ணில் படருது மாட்டு மூத்திரம் புனிதமாச்சி, மனித உசுரு மசுராச்சு இந்தக் கவிதை இன்குலாப்பை கண்முன் நிறுத்துகின்றது. 'அந்நியனை எதிர்த்து முதல் போர் கண்டோம் உள்ளவனை துரத்த இரண்டாம்போர் தொடுப்போம்' என்கிறார்.*

***அழகிய சிநேகிதம்***

*''நான் பிறந்தவுடனேயே*
*பார்த்துவிட்டேன்*
*உன் அழகிய தோற்றத்தை*
*உன் மேனியை தழுவாதவர்களே இல்லை*
*உன்னை தொட்டவர்கள் யாரும்*
*விட்டதில்லை.*
*உனக்கு எத்தனை மதிப்பு*

*உனக்குள் எத்தனை சிறப்பு*
*போர் முனைக்கு அஞ்சாதவர்கள்*
*உனக்கு அஞ்சுவர் (ப.17)*

*அழகிய சிநேகம் என்ற இக்கவிதையில் 'பேனாவே எனக்குச் சிறந்த நண்பன்' என விளக்குகின்றார்.*

**அவிழ்த்து விடச்சொல்**

*இக்கவிதையில் அரசியல் சிக்கல் ஆழமாகச் சொல்லப் படுகின்றது. அரசியல் ஆணவம், ஆதிக்க அரசியல், நீயா நானா என்னும் போட்டி பொறாமைகள் அழிக்கப்படவேண்டும். அதற்கு நம் கரங்கள் ஒன்று சேர வேண்டும். இளைஞர் சமூகம் ஒன்று சேர்ந்தால் காவு வாங்க வாய்ப்பு ஏது? துரோகிகள் தோலுரிக்கப்படுவார்கள் என்பதை இக்கவிதை சுட்டுகின்றது.*

*"மாய வலைகளில்*
*சிக்கித் தவிக்கிறது*
*தமிழ் தேசம்*
*நீயா நானா போட்டியில்*
*செத்து மடிகிறது தமிழ்*
*உறவு*
*கரம் கொடுக்காமல்*
*கர்வத்தையே பிடித்துக் கொண்டு*
*அலைந்தால்*
*இல்லாமல் போகும் இளைஞர் தமிழ்" (ப.21)*

*ஒன்று பட்டால் அரசியல் சாக்கடையை ஒழித்துச் சமத்துவ சமூகம் உருவாக்க முடியும். அதற்கு இளைஞர் பட்டாளம் முன்வர வேண்டுகோள் விடுக்கின்றார் இந்த கவிஞர்.*

**காற்புள்ளி**

*இக்கவிதை மூடநம்பிக்கைகளைப் பறைசாற்றுகின்றது. மக்கள் இன்னும் இருட்டில்தான் வாழ்கின்றனர் என்று சன சமூக அவலத்தைச் சுட்டிச் செல்கின்றது.*

*"தலையில் தேய்க்க*
*எண்ணையில்லை!*
*விநாயகருக்கு விளக்கேற்று*
*சோசியக்காரனின் சூழ்ச்சி*
*இருட்டில் வீடு*
*வெளிச்சத்தில் விநாயகர்*
*கல்சிலைக்கு*
*காஞ்சிபுரப் பட்டு*
*கந்தத் துணியின்றி*
*கடைக்கோடியில் தாய்*
*சிற்பியின் சிலைகளுக்கு*
*சந்தனக்காப்பு*
*மறுவாழ்வின்றி தவிக்கும்*
*விதவைகளுக்கு யார் பாதுகாப்பு*
*தோழா!*
*மூட நம்பிக்கைக்கு*
*முற்றுப்புள்ளியிடு*
*முறையான நம்பிக்கைக்கு*
*காற்புள்ளியிடு....! (ப.23)*

*என இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கிறார்.*

***பழைய கீறலோடு***

*அரசியல்வாதிகளின் செயல்பாடுகள், மக்களின் அவலம், கேட்பாரற்றுக் கிடக்கும் கிராமங்கள் தேர்தல் நேரங்களில் செல்லப்பிள்ளையாக மாறும் அவலம் ஆகியன இக்கவிதையில் சுட்டப்பெறுகின்றன.*

*"உறங்கிக் கிடக்கும்*
*மண் சாலைகளும்*
*உயிர் பெற்றுவிடும்*
*புழுதிகளோடு!*
*ஒற்றையடிப்பாதை ஊருக்கு*
*இனி வாகன வருகை தான்*
*வண்டிப் பாதையிலும் இனி*
*கச்சேரிதான்*
*எப்போதோ வந்து சென்ற வாகனங்கள்*
*அவ்வப்போது வந்து போகும்.*
*ஓட்டுச் சுவரும் பல வண்ணங்களுடன்*
*நகரத்து ஆடுமாடுகளுக்கு நல்ல தீனி*
*சுவரொட்டியால் (ப.24)*

***நாடக மேடை***

*ஒரு நாடகக் கலைஞன் பின்பற்றும் ஒழுக்கம் அவன் மனநிலையைப் படம்பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.*

*"அந்த ஊர்க் கச்சேரியில்*
*இசைவு கொடுக்காத*
*இசைக்கும்*
*இசைத்தபடி*
*ஆடுகிறாள் அவள்.*
*அவள் சதை அங்கும்*
*இங்கும் அசைகிறது*
*வேடிக்கை பார்க்கின்றன*
*நாய்கள் பல*
*நாக்குத் தொங்கியபடி"*
*விழிகளை திறந்தபடியே*
*மூடி அழுது கொண்டாள்" (ப.25)*

*கையாலாகாத கணவனையும் தன் குழந்தையையும் நினைத்து அவள் கலங்குகின்றாள். மேடைக் கலைஞர்களையும் சக மனிதர்களாக இந்தச் சமூகம் நினைக்க வேண்டும் என இக்கவிதை உணர்த்துகின்றது.*

***வீழ்ச்சி எழுச்சிக்கே***

*"கொட்டும் அருவி*
*வீழ்ந்து கிடக்கவில்லை*
*ஆறாக*
*எழுச்சி பெறுகின்றது*
*புதைக்கப்பட்டோம் என்று*
*வீணாக கிடக்கவில்லை*
*விதை*
*சூடுபட்டோம் என்று*
*சுருண்டுவிட்டதா?*

*மானததை காக்கும் உடையை*
*சலவை செய்கிறாய்*
*மனதையும் சலவை செய்" (ப.28)*

*நீ வீழ்வது எழுவதற்கு முடக்ங்கிக் கிடப்பதை முடக்கி எழுச்சி பெற்று எழுந்து ஓடு மனிதனுக்கு வெற்றியும் தோல்வியும் சகசம். மனிதனே! எழுந்திரு என இக்கவிதை விழிப்பூட்டுகின்றது.*

***குருதி***

*"இப்போது நான்*
*நடத்திருக்கும்*
*அந்தப் படுகொலை*
*வழியும் குருதியோடு*
*வாகனத்தில்*
*ஆற்று நீரில்*
*அள்ளிய மணல்" (ப.29)*

*என்ற கவிதை ஆற்றுமணல் கொள்ளையை அம்பலப்படுத்தி ஈரமில்லாத கொள்ளைக் காரர்களை நினைவூட்டுகின்றது.*

***நாய் நாடு***

*"நலிஞ்சு போச்சுடா தேசம்*
*நட்டம் நினித்தலனா*
*ரொம்ப மோசம்*
*நாளும் போடுறான் வேசம்*
*நடுத்தெருவில் நாயைப்போல*
*வெட்டுறான்*
*நாலாயிரம் தலைமுறைக்கும்*
*மூட்டை கட்டுறான்" (ப.30)*

*நம் தாய் நாடு தேடா நாதியா கெடக்குதடா நாடு தினம் நம்மதி போயி கருவறையிலும் ஊழல்தான் நடக்கிறது. தொண்டு செய்யம் அரசியல்வாதிகள் காணாமல் போய் அதைத் தடுக்கும் ஆற்றல் யாருக்கும் இல்லை நம் தாய் நாடு நாய் நாடாக மாறும் அவலமும் வளரும் தலைமுறைக்கு பெரும் பாடுதான் என்று எங்கும் ஊழல் எதிலும் ஊழல் என்பதை இக்கவிதை கூறுகின்றது.*

**திருப்பியடி**

*"கரை வேட்டிகளின்*
*கைகளில்*
*சிக்கித் தவிக்கிறது*
*இந்தியா*
*காசுக்கு ஓட்டு*
*அது நமக்கு*
*வைத்துக்கொள்ளும் வேட்டு*
*ஊழல் செய்வோரை*
*துரத்தியடி*
*உன் உறவு என்றாலும் திருப்பியடி" (ப.31)*

*கரைவேட்டி கட்டிக்கொண்டு அரசியல்வாதிகள் செய்யும் அவலத்தில் சிக்கியுள்ள தேசம் நம் மூலமாவது தெளிவுபெற உன் பேனாவின் மையில் உள்ளது வலிமை நிமிர்ந்து நின்று திருப்பியடி என்று எழுத்தாளர்களுக்கு அறைகூவல் விடுக்கிறார் கவிமதி சோலச்சி.*

***பிறப்பு ஒரு முறை***

*"போராடு காயமின்றி*

*ஒத்துப்போகவில்லையெனில்*
*ஒதுங்கிவிடு*
*படுகொலை தான்*
*தீர்வு யெனில்*
*பிரபஞ்சம் மட்டுமே*
*எஞ்சி இருக்கும்.*
*மனம் ஒத்துப்போனால்*
*வாழட்டும்*
*பிறப்பு ஒருமுறை*
*உயிர் எடுக்க வேண்டாம்*
*தொடரட்டும் தலைமுறை" (ப.32)*

*உலகத்தில் சர்வாதிகாரப் போக்கு இருப்பதால் இறப்பு நிகழ்கின்றது. பதின்பருவ பிள்ளைகளும் தற்கொலை செய்வது வழக்கமாக இருக்கிறது. கடவுள் கொடுத்த உயிரை எடுக்க யாருக்கும் அதிகாரம் இல்லை எனச் சமூகத்துக்கு அறிவுறுத்துகிறார் கவிஞர்.*

***அத்து மீறு***

*"குடகில் பிறந்தவள்*
*கல்லணையும் தாண்டி*
*கடலில் கலந்தவள்*
*முடங்கிக் கிடக்கிறாள்*
*மூச்சைப் பறிக்கிறாள்*
*தட்டிக் கொடுத்த இவளை*
*பாவம்*
*என்ன செய்வாள்*
*பிறந்த இடம்*
*சரியில்லை*
*புகுந்த இடமோ*
*சரியாய் இல்லை*
*முடங்கிக் கிடக்கும்*
*இவள் அடங்க மறுத்து அத்துமீறும்*
*நாள் எந்நாளோ...?" (ப.34)*

*நதிகளை முடக்கி வைக்கும் கல்நெஞ்சம் படைத்த மனிதர்கள் வாழும் சமூகம் நம் சமூகம். கொடுமையால் நதிகளை ஒன்று சேர்க்காமல் அடக்கும் சமூக அவலம் காணப்படுகிறது.*

**தேடிப்பார்க்கிறேன்**

*"உணவகங்களில்*
*சோறை தொலைத்துவிட்டு*
*ரைசை, காசாக்குகிறார்கள்*
*நாற் காலிகளை*
*காணவில்லை*
*சேர் மட்டுமே*
*அலங்கரிக்கிறது*
*பாலும், காணாமல் போய்விட்டது*
*மில்க் வந்த நாள் முதல்*
*பேருந்து ஓரங்கடப்பட்டு*
*பஸ் மட்டுமே*
*இயங்குகிறது" (ப.35)*

*இப்படித் தமிழ் படுகொலை செய்யப்பட்டுக் கலாச்சாரச் சீரழிவு, ஆங்கில மோக அமளியில் தமிழ்மொழி ஓரங்கட்டப்படும் அவலம், இன்னும் எத்தனை எத்தனையோ நாம் தொலைத்ததும் தொலைந்ததும் அழிந்ததும் தேடிப்பார்த்தும் தென்படவில்லை எனக் கலாச்சார சீரழிவு சுட்டப்பெறுகின்றது.*

***இமைகள் மூடி***

*“பலரும் இதில்தான்*
*நீச்சல் கற்றுக் கொண்டனர்*
*பள்ளி செல்லாமல்*
*பாஞ்சாம் பழம் பறித்துத் தின்று*
*குளித்து விளையாடியதும்*
*குளக்கரை அருகே என்பதால்*
*வசந்த காலம்தான் வருடந்தோறும்*
*தோட்டம் தொரவு என*
*கொடி கட்டிப் பறந்தது அதன்*
*சுற்று வட்டம்; பசுமையாய்*
*நாட்கள் நகர்ந்தன உற்றுப் பார்க்கிறேன்*
*குடல் வெடித்துக் கிடக்கிறது குளம்” (ப.37)*

*பாம்பு கீரிகளின் வாழிடமாய் புள்ளும் புதர்களும் மண்டிக் கிடக்கும் கிணறு வேலிக்கருவை மரங்கள் நிரம்பி காணப்படுகிறது. இமை மூடித் திறக்கும் போது கண்கள் ஊற ஆரம்பிக்கின்றன. குளத்தை ஓர் உயிருள்ள உயிர்போல் நேசிக்கும் கவிதையாக இக்கவிதை விளங்குகிறது.*

***வென்று தலை நிமிர்வோம்***

*“தலைவா!*
*நீ இருக்கும் தைரியத்தில்தான்*
*தலை நிமிர்ந்து நடக்கிறோம்*
*தரணியில்*
*ஈழம் இல்லையென்றால்*
*ஈனப் பிறவிதான்*
*உயிரை விட உணர்வு தான்*
*வாழவைக்கின்றது” (ப.40)*

*நமக்கென்று தனித் தேசம் வேண்டும். அடைக்கலம் கொடுத்த நம்மையே ஆட்டிப்படைக்கும் உலகம், நம் சிந்தை சிதைவதில்லை போராடுவோம் வென்று தலை நிமிர்வோம். நம் நாட்டையும் தேசத்தையும் பிற நாட்டுக்கு அடகு கொடுக்காமல் சிந்தையில் போராடி வென்று தலை நிமிர்ந்து வாழ்வோம் என்ற உணர்வை விதைக்கிறது. இக் கவிதை.*

***மாற்றம்***

*“கோடிகளை செலவு செய்து*
*தெருக் கோடிகளில்*
*சாதனை விளக்க கூட்டம்*
*ஆண்டவர்களை நம்பியும்*
*பயனில்லை*
*ஆள்பவர்களாலும் பயனில்லை*
*வாக்குகளை அடகு வைத்து*
*வாழ்க்கை நடத்தும்*
*அவல நிலை*
*இலவசங்களைக் கொடுத்து*
*வறுமையைத் தக்க வைத்து*

*அரசியல் பிழைப்பு நடத்தும்*
*இந்த தேசம்?" (ப.41)*

*நம் சமூகத்தில் அரசியல் மாற்றம் வேண்டும். தேர்தல் காலங்களில் காசுக்கு ஓட்டு. யாராலும் மக்களுக்குப் பலன் இல்லை. வாக்குகளை அடகு வைத்து வாழும் அவலநிலை சமூகத்தில் நடப்பதை இக்கவிதை சுட்டிக் காட்டுகிறது.*

***ரசனை***

*"காற்றின் ஓசையைக் கேள்*
*அதிலும் மெல்லிய கீதம்*
*ஓடும் நதியில் கால் வைத்துப்பார்*
*வருடும் நேரமும் வசந்தம் தான்*
*மரங்களின் கிளைகளிலும்*
*ஒரு நடனம் தெரியும்*
*பறவைகளின் ஓசையில் ஒரு*
*பாட்டுக்கச்சேரி*
*விலங்குகளின் நடையிலும் ஒரு*
*விநோத சத்தம் கேட்கும்." (ப.42)*

*உலகில் இருக்கும் அத்தனையுமே அழகு; ஒவ்வொன்றும் ஒவ்வொரு அழகு. மழைத்துளியை முத்தமிட்டால் மண்கூட வாசம் தரும். மயிலின் நாட்டியத்தில் நம் பாரம்பரியக் கலாச்சாரம் தெரிகின்றது. உலகம் பார்க்கப் பார்க்க ரசிக்க ரசிக்க எத்தனையோ புதுமைகளை இயற்கை நமக்குத் தந்துள்ளது. எவை இருப்பினும் எல்லாவற்றையும் எல்லோரும் பார்க்க முடியும். ஆனால் ரசனை உள்ளவர்களால்தான் ரசிக்க முடியும் என இக்கவிதை கூறுகின்றது.*

**கேட்டதை எல்லாம்**

*"தோளில் துண்டை சுமந்தாய்*
*என்னை தூக்கி செல்வதற்காக*
*எதையும் தின்பதைப் போலப்*
*பாவனை செய்வாய்*
*நான் தின்பதற்காக*
*நான் கோபமூட்டும் போதெல்லாம்*
*சிரித்துக் கொள்வாய்*
*என் சேட்டைகளை ரசிக்க*
*என் முதுகில் கை ஓங்கி*
*உன்னை அடித்துக் கொள்வாய்*
*கேட்டதை எல்லாம் கிடைக்கச்செய்வாய்"(ப.45)*

*இக்கவிதையில் தாய் தந்தையரின் அன்பு காட்சிப்படுத்தப்படுகின்றது. பிள்ளைகளே தங்கள் உலகம் எனத் தாங்கும் அன்பு அதன் உருவம் பெற்றோர் "பிள்ளைகளே உன் தாயையும் உன் தகப்பனையும் கணம் பண்ணுவாயாக அப்போது உன் வாழ்நாள் நீடித்திருக்கும்" என்கிறது கிறித்தவ வேத நூல்.*

***பூவரசு***

*"வீதியோரம் பூவரச மரம்தான்*
*சிறுவர்களின் விளையாட்டரங்கம்*
*ஒவ்வொரு கிளைகளும்*
*பேருந்தாக, புகைவண்டியாக*
*இலைகளைச் சுருட்டி*
*பீப்பி வாசிப்போம்*
*காய்களைப் பம்பரமாகச் சுற்றுவோம்" (ப.48)*

*என்றும் எப்போதும் அந்த அரங்கம் எழிலுடலேன் காட்சிதரும். குருவிகள் மைனாக்கள் கொஞ்சும் ஒலி கேட்டுக்கொண்டே இருக்கும். அந்த மரங்கள் இப்போது காசுக்காக வெட்டி விற்கப்படுகின்றன. சிறார்களும் சிறகடிக்கும் பறவைகளும் கண்ணீர் துளிகளோடு ஏங்கி நிற்கும் அவலத்தை இக்கவிதை படம்பிடித்துக் காட்டுகிறது.*

***மதங்களை கடந்து வா!***

*"கடவுள் விவாதத்திற்கு உரியது அன்று*
*இயற்கையே ரசிப்பது*
*இன்பத்திற்கு உரியது*
*இல்லாத ஒன்றால்*
*இருப்பவர்கள் அழியலாமா*
*இளைஞன் நீ*
*இமைமூடி தூங்கலாமா*
*இயற்கை சக்திக்கு*
*மனிதசக்தி வெறும் புள்ளிதான்*
*இயற்கை மதத்தில்*
*சாத்யத்தில் மூழ்கி இருந்தால்*
*நீர் நெருங்காது*
*காற்று நம்மை காணாது*
*நிலம் நம்மை ஏற்காது*
*தோழா*
*வெற்றுச் சங்கிலியை*
*விரட்டி விட்டு*
*மனிதச் சங்கிலிக்கு கை கொடு*
*மனிதம் வளர்ப்போம்" (ப.49)*

*இதில் சாதி வெறியோடு கிடக்கும் நம் சமூக இளைஞர்களை இருகரம் ஏந்தி மனிதம் வளர்க்க வரவேற்கிறார் கவிஞர். சாதிகள் வெறும் இயற்கை அல்ல. மனிதன் தன் கவுரவத்திற்கு உண்டாக்கப்பட்ட தூண். அதை உடைக்கவேண்டும் என்கிறார்! "சாதிகள் இல்லையடி பாப்பா" என்ற பாரதியின் வரிகள் நம்மை நினைவுகூறிவைக்கின்றன.*

***கருத்தடை மாத்திரை***

*"உடலை விட்டு*
*ஆவி போனால்*
*வீணாய் போகும்*
*நீரை விட்டு*
*ஆவி போனால்*
*மழையாகும்*
*தன்னை வருத்தி*
*உழைத்த போதும்*
*சுயநலமாய் மனிதன்*
*தான் வருந்தி அழுதபோகும்*
*பொது நலமாய் மழை*
*கடகடனு வளரும்*
*யூகலிப்ட்ஸ்சு*
*மழை மேகத்தின்*
*கருத்தடை மாத்திரை" (ப.52)*

*ஒவ்வொரு நாளும் நாம் சந்திக்கும் சமூகமும் மக்களும் மிகவும் மோசமானது பாலிதின்களை நாம் அப்படியே போடுவதால் மண் மக்கும் நிலை இல்லை. நீர் வளம் குன்றிவிடும்; மண் வளம் மக்கி போகும்.*

*நீர் இல்லையேல் நிலம் பாதிப்படையும்; இயற்கை அழியும் போது நிலத்தடி நீர் பாதிக்கும். இந்த வகை நச்சுக்கள் நம் நிலங்களின் கருத்தடை மாத்திரையாகக் காட்டுகின்றன.*

***சமூகச் சீரழிவு***

*“ஊமைகளாய்க் கிடந்தோருக்கு*
*மகாத்துமாக உண்ணாநிலை*
*இருந்ததும்*
*ஒடுக்கப் பட்டோரை ஓட்டுக்கு*
*ஒட்டிக் கொள்வதும் மட்டும்*
*முற்றும் துறந்தவன்*
*முந்தானை வாசம் குடித்து*
*கொட்டும் இன்பத்தில்*
*கோடிகளில் புரளுவதும்*
*மக்கள் அவதியுற ஆட்சி நடத்துவதும்*
*வாக்கினை விலை கொடுத்து வாங்கி*
*வாகை சூடியதாய் வீண் அங்கலாய்ப்பது*
*வாழ்வு நீண்டது எனக் கனவு கண்டு*
*வந்தவையெல்லாம்*
*வாரிச் சுருட்டும் படுகொலைதான்*
*போதும் போதும் இன்னும்*
*எந்தெந்த விதத்தில்தான்*
*படுகொலை செய்யப்படும் என்*
*தேசம்” (ப.54)*

*பண்பாடு, கலாச்சாரம் என்ற பெயரில் சில படுகொலைகள் (குறிப்பாக) பெண் பிள்ளைகள் கற்பழிக்கப்பட்டு, படுகொலை செய்யப்படுவதும் சாமியார்கள் பக்தியின் பெயரில் செய்யப்படும் அட்டகாசம் நாட்டை நாசம் செய்கின்றது. சில ஜாதி மக்களை சிலர் எப்போதுமே கண்டுகொள்வதில்லை. ஆனால், ஓட்டுக்காக மட்டுமே அவர்களை சேர்த்துக்கொள்வதும் வாடிக்கையான ஒன்று.*

*வாழ்வு நீண்டது என வந்ததையெல்லாம் வாரிச் சுருட்டிக் கொள்வதும் வாடிக்கைதான். படுகொலைகள் நிறுத்தப்படும்போதுதான் தேசம் ஒழுங்குபடும் என்றவாறு பல்வேறு உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளார்.*

**விடியத் தொடங்குகிறது**

*“வலிகளைச் சுமந்து*
*வழி தேடுகிறேன்*
*விழிகளைக் கசக்கியபடி*
*நகர்கின்ற நாட்கள்*
*மாற்றம் வரும் என*
*நம்பினேன்*
*மிஞ்சியது ஏமாற்றமே” (ப.56)*

*ஒவ்வொரு மனிதனுக்கும் கனவுகள் ஏராளம். அந்தக் கனவை நனவாக்கச் சிற் சில வழிகளைத் தேடும்போது வலிகளும் ஏராளம். வலிகளை மறந்து கனவுக்குத் தயாராகி விடுவதுதான் இயல்பான மனித வாழ்க்கையாகிவிடுகிறது என்கிறது இக் கவிதை.*

**வானத்தைப் பார்க்கிறேன்**

*“எப்போதும் போல்*
*எழுவேன்*
*இந்நாளும் அப்படியே*

*ஆனால் மாற்றம்*
*சிந்தனையற்ற*
*என் உள்ளம் சிறகடித்து*
*எண்ணச் சிறகுகளோடு*
*தடை கொண்ட*
*பூமியை விட*
*தடைகளற்ற வானம்*
*நிறையவே பிடித்தது*
*சிறிய துவாரம் போதும்*
*சிற்றெறும்புக்கு*
*பரந்த உலகையே*
*தன் வீடாய் எண்ணுகிறது?*
*மனிதனுக்கு மட்டும்*
*ஏன் சின்ன வட்டம்" (ப.60)*

*ஒவ்வொரு மனிதனும் தங்கள் எண்ண ஏணிப்படியைக் கூரை நோக்கி போடாமல் வானத்தை நோக்கி போடவேண்டும். எண்ணங்கள் எப்போதும் சீராய் வானத்தை நோக்கியே இருக்கவேண்டும். சிறகுகள் முளைத்த பறவைபோல் சிறகடித்துப் பறக்கவேண்டும். மனிதன் தனக்குள் ஒரு வட்டம் போட்டுக்கொண்டு வாழாமல் எறும்புகளைப் போல் வாழக் கற்றுக் கொள்ளுங்கள் என இக்கவிதை வழிகாட்டுகின்றது.*

***விரிசல்***

*"யதார்த்தமாய் வாசிக்கிறேன்*
*உற்றுப் பார்க்கிறேன்*
*அன்றொரு நாள்*
*விரிசல்விடத் தொடங்குகிறது*
*அடைக்க முயற்சிக்கிறேன்*
*தொடர்கதையாகிறது விரிசல்" (ப.76)*

*மனிதனின் வாழ்க்கையில் ஒவ்வொரு இடமும் விரிசலோடுதான் காணப்படுகிறது. பொதுவாக வாழ்க்கை, சமூகம், உறவுகள் எல்லாமே விரிசலோடும், கசப்புகளோடும் கனத்த இதயங்களோடும் நகர்கின்றன. ஆனாலும், வாழ்கிறோம் ஏதோ ஒரு நம்பிக்கையோடு; தன்னம்பிக்கை மிகுந்த வாழ்க்கை மனிதனை முன்னிறுத்திச் செல்லும் என்ற நம்பிக்கையை இக்கவிதை விதைக்கின்றது.*

*கவிமதி சோலச்சியின் கவிதைகளில் சமூக சிக்கல்கள் ஏராளமாக இடம் பெற்றுள்ளன. அரசியல், சமூகம், குடும்ப உறவுகள் அரசியல் சகாக்கள், உறவுகளின் பின்னணி வாழும் வரை நீ நீயாக வாழக் கற்றுக்கொள்; ஒத்து ஊத கற்றுக்கொண்டால் நீ அடிமையாக வாழ நேரிடும் என்றும் சமூகத்தின் கூக்குரல்களை இதில் காட்டி உள்ளார். காசுக்கு ஓட்டு விற்கப்படும் அவலங்களும் சொல்லப்படுகின்றன. மேலும், அரசியல், ஆன்மீகம், கட்டுண்ட பெண்கள் நிலை, ஒடுக்கப்பட்ட சமூகம் பரத்தையர் சிக்கல், கற்பு பற்றிய புதிய மதிப்பீடுகளை தன் கவிதையின் மூலம் உருவாக்கும் போக்கு ஆகியன இக்கவிதைகளில் பொருந்தி உள்ளன. மானுட சமூகத்தின் அவலங்களை எடுத்துக் கூறி மக்களை விழிப்படையச்செய்யும் நோக்கும்போக்கும் உடையனவாக இத்தொகுப்பின் கவிதைகள் விளங்குகின்றன.*

***பயன்பட்ட நூல்கள்***


*அப்துல் ரகுமான் - **புதுக்கவிதையில் குறியீடு** செல்மா வெளியீடு, சிவகங்கை, முதற்பதிப்பு -1990.*

*அப்துல் காதர் - **மீராவின் கனவுகள்** அன்னம் வெளியீடு, சிவகங்கை,*

*முதற்பதிப்பு -1987.*

*கி.இராசா* - **பெண்ணும் பெண்மையும்**
*எத்திராஜ் கல்லூரி வெளியீடு,*
*நியூசெஞ்சுரி பப்ளிஷர், சென்னை,*
*முதற்பதிப்பு -2008*

*கவிமதி. சோலாச்சி* - **விரிசல்**
*மேன்மை வெளியீடு,*
*கேபிடல் இம்ப்ரசன், சென்னை,*
*முதற்பதிப்பு – 2017.*